**தலைப்பு- 267 முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்/ கச்சேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை- 2013**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ). மாவட்ட மற்றும் பிரதேசங்களில் சிறந்த வழியில் முழுமையான குடிமக்கள் உருவாகுவதை அமுலாக்குவதற்கு.

(ஆ). மாவட்டத்தில் நிர்வாகம் மற்றும் அபிவிருத்திகளை ஒருங்கிணைத்து தலைமை தாங்குதல்

(இ) மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் சேவையில் உற்பத்தி மற்றும் தரத்தினை உயரத்துவதற்கு சிறந்த வழியில் அரசாங்க கொள்கைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளை அமுலாக்கல்.

(ஈ). வெளிப்படையான, பக்கசார்பற்ற மற்றும் பொறுப்புடனான பொது மக்கள் சேவையை உருவாக்குவதற்கு.

(உ). உத்தியோகத்தரின் இயலளவை வலுப்படுத்தல்.

(ஊ). மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நிதி முகாமைத்துவ முறைமையை முன்னேற்றுவதற்கு.

(எ). ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான மாவட்ட மற்றும் பிரதேச பொது மக்கள் நிர்வாக முறைமையை உறுதிப்படுத்துவதற்கு.

(ஏ). மாவட்டத்தில் பொது மக்களின் தேவைகளை திருப்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான சேவைகளை வழங்குவதற்கு.

(ஐ). அரசாங்க சேவைகளின் உற்பத்தி மற்றும் தர சேவைகளை முன்னேற்றுவதற்கு நவீன தகவல் தொழில்நுட்பத்துடன் முழு சேவைகளையும் அறிமுகப்படுத்தல்.

(ஒ). பிரதான நிதிக் குறிகாட்டிகளை அளவிடுவதற்கு.

(ஓ). அமைச்சுக்களால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை செய்வதற்கு.

(ஔ). மாவட்ட மற்றும் பிரதேசங்களில் அரச விழாக்களை நடாத்துதல்.

(க). மாவட்ட மட்டத்தில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் மீளாய்வு செய்வதற்கு.

(கா). இடர் முகாமைத்துவம் மற்றும் அனர்த்தங்களை செய்வதற்கு முன் திட்டமிடல் நடவடிக்கைகளை தயாரிப்பதற்கு.

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

---

(அ) கரைதுறைப்பற்று
(ஆ) ஒட்டிசுட்டான்
(இ) மாந்தை கிழக்கு
(ஈ) துணுக்காய்
(உ) புதுக்குடியிருப்பு
(ஊ) வெலிஓயா

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய வருமானக் கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாவட்ட செயலகத்தின் நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கணக்குகளின் சமர்ப்பித்தல்

மாவட்ட செயலகம் 2014 திசெம்பர் 31 அளவில் கணக்காய்விற்காக வருமானக் கணக்குகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

### (ஆ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை

(i) முல்லைத்தீவு மாவட்ட செயலகம் பின்வரும் பதிவேடுகளை பேணப்பட்டிருக்காத அதேநேரம் வேறு சில பதிவேடுகளையும் முறைப்படி பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| ஓய்வூதியம் - மிகையறவீட்டுப் பதிவேடு | கச்சேரிக் கைநூல் 4:4(II) |
| ஓய்வூதியம் - ஓய்வூதியத்தின் வேறுபட்ட வகை | கச்சேரிக் கைநூல் 4:2(I) |

| | |
|---|---|
| அடியிதழ் புத்தகப் பதிவேடு | கச்சேரிக் கைநூல் 5:10 |
| புத்தகங்களின் தொகுப்பு | கச்சேரிக் கைநூல் 5:9 |
| தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 846(3), 845(1) |
| குறைநிரப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 |
| பெட்டக இருப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 |

(II) மாவட்ட செயலகத்தின் ரூபா 2,321,468 தொகையான பத்துக் கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பெறுவனவு, உத்தியோகத்தர்களின் அவதானிப்பு திகதி, சான்றுபடுத்தல் மற்றும் பெறுபவர்களின் கையொப்பங்கள் போன்ற சான்றுகள் கிடைக்காமை காரணமாக கணக்காய்வில் சான்றுறுதி செய்ய முடியவில்லை.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 255,802,225 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 243,356,416 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, மாவட்ட செயலகத்தின் தேறிய சேமிப்பு ரூபா 12,445,809 அல்லது 4.8 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 137,007,225 | 125,938,794 | 11,068,431 | 8 |
| மூலதனம் | 118,795,000 | 117,417,622 | 1,377,378 | 1.1 |
| மொத்தம் | 255,802,225 | 243,356,416 | 12,445,809 | 4.8 |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

----------------------------------------------------------------------------------------------------------------

பல்வேறு நடவடிக்கைகளுக்காக 10 அமைச்சுக்கள் மற்றும் 11 திணைக்களங்களிடமிருந்து ரூபா 240,924,269 மொத்தமான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 231,452,662 ஆன தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி ரூபா 9,471,607 ஆன சேமிப்புகளாக இதுந்ததுடன் இது பெறப்பட்ட மொத்த ஏற்பாடுகளில் 3.9 சதவீதமாக இருந்தது.

- 11 சந்தர்ப்பங்களில் ஐந்து சதவீதத்தை விஞ்சிய சேமிப்புக்களிற்கான விளக்கங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(iii) வருமானக் கணக்கு**

--------------------------------

நிதிப்பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம், வருமான நிலுவைக் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

------------------------------------------------------------------------------------------

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை

---------------------------------------------------------------------------

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 26701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ள படியானது** | **இழிவு எல்லை** | **உள்ள படியானது** | **உச்ச எல்லை** | **உள்ள படியானது** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 13,000,000 | 12,997,638 | 5,000,000 | 9,085,823 | 44,,000,000 | 33,555,918 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு இணக்கக் கூற்றின்படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 726,573 மொத்தமான மீதி நிலுவையாக இருந்ததுடன் நிலுவையாகவிருந்த மீதிகளின் அறவீடு மீதான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் இருந்தது.

(ii) 1988 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 29/88 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 14:5 ஆம் பிரிவின் பிரகாரம் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 1,205,340 தொகையான இரண்டு ஆண்டு கடன்கள் பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

கட்டுநிதிப் பதிவேடு மற்றும் துணைநிலை கட்டுநிதிப் பதிவேடு என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 முதல் 04 ஆண்டு கால வீச்சாக பொது வைப்புக் கணக்கில் இருக்கின்ற ரூபா 1,307,323 தொகையான பிடிகாசு மீது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல்வேறு நோக்கங்களிற்காக வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து கிடைத்த ரூபா 651,083 ஆன தொகை 02 முதல் 04 ஆண்டு கால வீச்சில் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

(iii) ரூபா 135,000 தொகையான வியாபார பதிவுக் கட்டணம் மற்றும் ரூபா 45,333 ஆன மதுவரி(excise duty) என்பன உரிய வருமானக் கணக்கிற்கு செலவு வைக்காமல் 02 முதல் 03 ஆண்டு கால வீச்சில் பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

**1.6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

### 1.6.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந்திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம், போதிலும் மீளாய்வாண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந்திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் பந்தி (ஈ) மற்றும் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந்திகதிய முறையே அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கங்கள் 402 மற்றும் 402(1) என்பவற்றின்படி 2014 திசெம்பர் 31 வரையும் மாவட்ட செயலாகத்தால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 வரை பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

2006 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு சுற்றறிக்கையின் பிரகாரம் மூன்று மாதங்களிற்கு ஒருதடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடைபெற வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கூட்டங்களை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கு ஒதுக்கப்பட்ட 26 வாகனங்களின் பெறுமதி பெறுமதியிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 வரை மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபை அறிக்கை நடவடிக்கை நிதிப் பிரமாணம் 757 இன் பிரகாரம் நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை

**1.8 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா | |
| (i)2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்க சுற்றறிக்கை | | நிலையான சொத்துப் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் மீதான நிலையான சொத்துப் பதிவேடு பேணப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நிதிப் பிரமாணம 94 | 245,238 | பொறுப்புக்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப் பிரமாணம 110 | 298,906,617 | நட்டங்களிற்கான பதிவேடொன்று முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை |

| | | |
|---|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 137 | 38,456 | செலவினத் தலைப்பு 252 இலிருந்தான கொடுப்பனவுகள் மாவட்ட செயலாளருக்குப் பதிலாக மாவட்ட செயலக உத்தியோகத்தரால் அனுமதிக்கப்பட்டிருந்தது. |
| (iv) நிதிப் பிரமாணம் 756 | | (i) மீளாய்வாண்டின் போது 136 கிராம சேவகர் அலுவலகங்களில் களஞ்சியங்களில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.<br><br>(ii) மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் 185 களஞ்சிய விடயங்களின் உள்ளபடியான பௌதீக மீதி மீளாய்வாண்டின் போது வருடாந்த களஞ்சிய மெய்மையாய்வு செய்யப் பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

---------------------------------------------

| | | |
|---|---|---|
| 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2,497,861 | உத்தியோக பூர்வ வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) கொள்வனவு வழிகாட்டல்கள்

-----------------------------------------------

| | | |
|---|---|---|
| பிரிவு 5.4.11 | | பெறுமதி சேர் வரியின் விபரங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளிற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.9. நட்டங்களும் சேதங்களும்

ஒதுக்கீட்டு கணக்கு நட்டங்களின் பிரகாரம் சுனாமி மற்றும் இடையூறு காலம் காரணமாக ரூபா 298,906,617 தொகையான நட்டங்கள் அடைந்திருந்த போதிலும் நிதிப்பிரமாண இல. 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10. முகாமைத்துவ நலிவுகள்

கணனி அச்சீட்டு இயந்திரங்களிற்காக 27 ரோனர் காட்ரேஜ் ரூபா 306,000 இற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இனங்காணலிற்காக தரச்சான்றிதழ் பார் கோட் வாசிப்பு மற்றும் அடையாளம் கணக்காய்வில் அவர்களுடைய நேர்மைத் தன்மையை ஏற்பதற்கு கிடைத்திருக்கவில்லை.

## 1.11. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறுஇருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 15 | - | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 00 | 13 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 192 | 173 | 19 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 25 | - | 13 |
| | மொத்தம் | 225 | 213 | 32 | 20 |

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பதவியணிக்கு மிகையாக நியமிக்கப்பட்ட 20 ஊழியர்களை ஒழுங்குபடுத்துவதற்கும் 32 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

*M*